**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 142/2014</u>**
**<u>மற்றும்</u>**
**<u>அசல் வழக்கு எண். 180/2017</u>**
**<u>நாள் 25/01/2025 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – முனுசாமி | த/பெயர் – ஜெயராமன் |
| வயது – 44 | தொழில் – |
| விலாசம் – பெரவள்ளூர் கிராமம் | |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

வா.த.சா ஆ 1 உயில் ஆவணத்தை எல்லம்மாள் ருக்மணி அம்மாளுக்கு எழுதிவைத்த உயில் சாசணம் என்றால் சரிதான். மேற்படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் பழைய சர்வே எண் 43/1 என்பதற்கு புதிய சர்வே எணட 183/14 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் கொண்ட சொத்து தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். மேற்படி ருக்மணியம்மாளை எல்லம்மாள் வளர்த்த பாசத்தின் அடிப்படையில் தான் மேற்படி உயில் எழுதி கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தான உயில் சொத்து பெரவள்ளூர் கிராமத்தில் தான் உள்ளது என்றால் வழக்கு சொத்து பெரவள்ளூர் கிராமத்தில் உள்ளது, உயில் சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.த.சா ஆ 2 கிரைய பத்திரத்தில் பழைய சர்வே எண் 43ல் பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பெரவள்ளூர் கிராமத்தில் உள்ளது. பி.எஸ்.கண்ணன் என்பவருக்கு பெரவள்ளூர் கிராமத்தில் உள்ளது அதிகபடியான சொத்துக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்

43/1ல் 8 ஏக்கர் 86 செண்ட்டில் அப்பாசாமி முதலியாருக்கு 3 பாகமும், நாராயணசாமி முதலியாருக்கு ஒரு பாகமும் ஒதுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எண்ணிடம் காண்பிக்கப்படும் நகல் உயிலானது பி.எஸ். கண்ணன் என்பவர் வாதிகள் பாஸ்கர் மற்றும் ரவிக்கு எழுதிகொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு அந்த உயிலை பற்றி தெரியாது. மேற்படி உயிலானது தமிழ் மொழியில் உள்ளது. ருக்மணியம்மாள் வாதிகள் பாஸ்கர் மற்றும் ரவிக்கு எழுதி பதிவு செய்து கொடுத்த உயில் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயிலை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் தாவா சொத்தில் 3/4 பாகத்தை பாஸ்கர் மற்றும் ரவிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் வடக்கு தெற்காக 60 அடியும், கிழக்கு மேற்காக 15 அடியாக எழுதப்பட்டு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை என். ஆறுமுகம் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றேன். வா.த.சா ஆ 2 கிரைய பத்திரத்தில் மேற்படி சொத்து ஆறுமுகம் முதலியின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டு அவர்களது காலத்திற்கு பிறகு ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் முதலில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3ல் வழக்கு சொத்தானது என். ஆறுமுகத்திற்கு உரிமையானது மற்றும் அவரது அனுபவத்தில் இருந்து வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகம் எனக்கு உறவினர் அல்ல. நான் கிரையம் பெற்றதில் இருந்து வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறேன். வழக்கு சொத்தில் 3/4 பாகம் 24 செண்ட் நிலத்தை பாஸ்கர் மற்றும் ரவி உயிலின் அடிப்படையில் அனுபவத்தில் இருந்து வருவது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

நான் பட்டா, சிட்டா, அடங்கல், வில்லங்கசான்று ஆகியவற்றை சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் பார்த்ததாக கூறப்படும் வில்லங்கசான்றில் உயில் பதிவு செய்யப்பட்ட விவரம் குறிப்பிடப்பட்டிருந்தா என்றால் இல்லை. நான் வழக்கு சொத்திற்கு யு.டி.ஆர்–ல் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு கிரைய சொத்தின் முந்தைய கிரைய ஆவணங்களையோ மற்றும் உயிலையோ பரிசீலணை செய்து கிரையம் பெறவில்லை என்றால் மேற்படி சொத்திற்கு கிரைய ஆவணங்கள் இல்லை. பாஸ்கர் மற்றும் ரவி சென்னையில் வசிக்கிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பாஸ்கர் மற்றும் ரவி வழக்கு சொத்தினை அடிக்கடி வந்து பார்த்து செல்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. வழக்கு சொத்தின் பட்டா யு.டி.ஆர் –ல் தவறுதலாக ஆறுமுகம் பெயருக்கு மாற்றப்பட்ட விவரம் மேற்படி பாஸ்கர் மற்றும் ரவிக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் செய்தவர் அனைவரும் பெரவள்ளூர் கிராமத்தில் தான் வசிக்கிறார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். உண்மையில் எனக்கு கிரையம் செய்தவர்கள் கிரையம் செய்த சமயத்தில் பெரவள்ளூர் கிராமத்தில் வசிக்கவில்லை என்றாலும் சென்னையில் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வந்தனர் என்றால் சரிதான். அதற்கு ஆதாரமாக மேற்படி கிரைய பத்திரத்தில் ஆதரவுகள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரையம் செய்தவர்கள் ஆறுமுகத்தின் வாரீசு தாரர்கள் என்பதை வாரீசு சான்றின் மூலம் தெரிந்துக்கொண்டேன். வா.த.சாஆ 2 கிரைய பத்திரம் மொத்தம் 14 தாள்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்துடன் ஆறுமுகத்தின் வாரீசு சான்று இணைக்கப்படவில்லை அதன் எண் மட்டும்

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறுமுகத்தின் வாரீசுகள் எனக்கு தெரிந்து சுமார் 20 வருடங்கலாக வசித்து வருகிறார்கள். யு.டி.ஆர் காலகட்டத்தில் ஆறுமுகத்தின் வாரீசுகள் தாவா கிராமத்தில் வசித்து வந்தார்களா என்று எனக்கு தெரியாது. 2012 ம் வருடம் பாஸ்கர் மற்றும் ரவி உயில் மூலம் பெற்ற சொத்தை ஒரு லோகநாதன் என்பவருக்கு பொது அதிகார பத்திரத்தை எழுதி கொடுத்தனர் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி லோகநாதன் வழக்கு சொத்தை அளக்கும் போது தான் நான் ஆட்சேபனை செய்தேன் என்றால் சரிதான். 17.10.2013 ல் லோகநாதன் தரப்பில் காவல் நிலையத்தில் புகாா் கொடுக்கப்பட்டு நான் அதில் ஆஜரானேன் என்றால் சரிதான். காவல்நிலைய விசாரணையில் பாஸ்கர் மற்றும் ரவி தரப்பில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகாா் மனுவானது என்னால் கொடுக்கப்பட்டது. பாஸ்கர் மற்றும் ரவி தாக்கல் செய்த வழக்கானது இந்த வழக்கிற்கு முந்திய வழக்கு என்றால் சரிதான். பாஸ்கர் மற்றும் ரவி வில்லங்கசான்று மூலம் கிரையம் செய்துள்ளதை தெரிந்தவுடன் அவர்கள் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பிறகு எங்கள் தரப்பில் பஸ்கர் மற்றும் ரவிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி ஒரு வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு அசல் வழக்கு எண் 142/2014 என்றால் சரிதான். மேற்படி இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்யகோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வழங்கப்பட்ட உத்தரவின் பெயரில் இந்த இரு வழக்குகளும் ஒன்றாக விசாரணை செய்யப்படுகிறது என்றால் சரிதான். பாஸ்கர் மற்றும் ரவி மேற்படி ஆறுமுகம் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய கோரி

பொன்னேரி கோட்டாச்சியரிடம் மனு செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கூறுவது தவறு என்றும் மேற்படி மனுவில் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதால் அந்த மனுவை விசாரணை செய்யகூடாது என ஆட்சேபனை மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் அந்த மனு விசாரணை செய்யப்படாமல் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எங்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்ணும் ஏற்க்கெனவே இருந்த பட்டாவின் எண்ணும் ஒன்றாக உள்ளதில் இருந்து மேற்படி பட்டா மோசடியாக பெறப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது என்றால் சரியல்ல. ஆறுமுகத்தின் வாரீசுகளிடம் இருந்து பட்டாவில் இருந்து முழுசொத்தையும் கிரையம் பெற்றதால் அதே பட்டா எண்ணில் எங்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. ஆறுமுகத்தின் தந்தை நாராயணசாமிக்கு சர்வே எண் 43/1ல் 8 ஏக்கர் 86 செண்ட்டில் ஒரு பாகமான 8 செண்ட் மட்டுமே உரிமை உள்ள நிலையில் அதற்கு முரணாக ஆறுமுகத்தின் வாரீசுகள் எனக்கு ஏற்ப்படுத்தி கொடுத்த கிரையபத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. யு.டி.ஆர் –ல் வழங்கப்பட்ட தவறான பட்டாவை பயன்படுத்திக்கொண்டு 24 செண்டையும் சேர்த்து ஆறுமுகத்தின் வாரீசுகள் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும் மேற்படி கிரையம் பாஸ்கர் மற்றும் ரவியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு 32 செண்ட் பாத்தியப்பட்டு இருந்தது என்பதை நிரூபிக்க பட்டா ஒரு உரிமை மூல ஆவணம் அல்ல என்பதால் அது வாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் உள்ளது என்பது தெரிந்தும் அதனை மறைத்து ஆறுமுகத்தின் வாரீசுகள் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**